<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS</u>** <u>177/2018</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 06.02.2026

Dw1 ( செல்லப்பன்)

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி(வாதி தரப்பில்)</u>**

3ம் பிரதிவாதி சத்யா எனது மற்றொரு மகள். சண்முக சாமி திருமணமாகாமல் இறந்து விட்டார் என்றால் சரி. சண்முக சாமி எனது மகள் திவ்யாவை வளர்ப்பு மகளாக வளர்த்து வந்தார் என்றால் சரிதான். என் சகோதரர் சண்முக சாமி உயிருடன் இருந்தபோது கடன் எதுவும் வாங்கவில்லை, அதற்கான அவசியமும் இல்லை. என்னிடமோ என்மகள் திவ்யாவிடமோ சண்முசாமிக்கு கடன் கொடுத்ததாக யாரும் அணுகவில்லை என்றால் சரிதான். ஒரு சுப்பிரமணி மற்றும் தங்கவேல் பணம்கொடுத்ததாகவும் சண்முக சாமி அந்த பணத்தை திரும்ப செலுத்த வேண்டும் என்று முருகேசன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால அது தவறு. அவ 119/2012 மற்றும் 120/2012 ஆகிய வழக்குகளில் உள்ள பிரதிவாதிகள் மீது தனிப்பட்ட தீர்ப்பாணை தான் ஏற்பட்டுள்ளது என்றும் சொத்துக்கள் மீது தீர்ப்பாணை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அந்த வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்பாணைகள் தான் என்னிடம் காண்பிக்கப்படுவது .அது **வாசாஆ 6 மற்றும் 7.** 1ம் பிரதிவாதி மீது சண்முகசாமி உயில் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளார் என்றால் அவர் சொல்லியுள்ள விவரம் தவறானது. அவ்வாறு உயில் ஏற்படுத்தி வைக்க வாய்ப்பில்லை. முருகேசன் சண்முகசாமி தனக்கு தான் உயில் ஏற்படுத்தி வைத்ததாக அவ 184/2012 என்ற வழக்கை என் மீது தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். சண்முக சாமிக்கு கடன் கொடுத்ததாக கடந்த 14 ஆண்டுகளாக என் மீதோ திவ்யாவிடமோ அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். சண்முக சாமி திவ்யாவிற்கு ஏற்படுத்திய உயில் விவரம் எங்கள் உறவு முறை உள்ள அனைவருக்கும் தெரியும். திவ்யாவின் பேரில் ஏற்பட்டுள்ள உயில் குறித்து யாரும் ஆட்சேபணை

செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வாதிக்கு உயில் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். திவ்யா வழக்கில் கோரியுள்ள பாகப்பிரிவினை வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.02.06 05:22:01 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS